# News Release

# வேகத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்

*வாகன் தானியங்கி வேக நடைமுறைப்படுத்தல் திட்டத்தைத் துவங்குகிறது*

**வாகன், ஒன் (அக். 30, 2024) –** சாலைப் பாதுகாப்பு வாகன் நகரத்தின் முக்கிய முன்னுரிமையாகத் தொடர்ந்து வருகிறது - நம் சமூகத்தில் வேகத்தைக் குறைக்க நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சமீபத்தில் இன்று துவங்கப்பட்டது - தானியங்கி வேக நடைமுறைப்படுத்தல் (ASE)!

மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள் முதல் '*நகராட்சி வேகம் காட்டும் கேமரா விரைவில் வருகிறது*' பலகையை மிஸ்டி மீடோவ் டிரைவின் தெற்குப் பகுதியிலுள்ள ஆன்ஸ்லே குரோவ் சாலையில் வெளிப்படுத்தி அதிகாரப்பூர்வமாக இத்திட்டத்தைத் துவங்கி வைத்தனர்.

நமது மிகவும் பாதிப்படையக்கூடிய சாலைப் பயனர்களைப் பாதுகாப்பதற்கான எங்கள் தொடர் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, வேகம் காட்டும் கேமராக்கலை பள்ளி மண்டலங்கள் உட்பட சமூகப் பாதுகாப்பு மண்டலங்களுக்கு நகரமெங்கும் புத்தாண்டு தொடங்கி முன்னுரிமை அடிப்படையில் வருகின்றன. ASE வேகக் கட்டுப்பாட்டை அமல்படுத்த ஒரு கேமராவையும் வேக அளவீட்டுக் கருவியையும் பயன்படுத்துகிறது. ஒரு வாகனம் ஒரு ASE பகுதியில் வேக வரம்பைத் தாண்டினால், மாகாணக் குற்றப்பிரிவு அதிகாரியின் ஆய்வுக்கென கணினி அமைப்பு ஒரு படம் பிடிக்கும். குற்றத்தின் படச் சான்று, உரிம எண் மற்றும் அதற்கான அபராதச் சீட்டு போன்றவை வாகன உரிமையாளருக்கு (வாகனம் ஓட்டியது யாராயிருந்தாலும்) 30 நாட்களுக்குள் அஞ்சல் செய்யப்படும்.

அடையாளப் பலகைகள் அந்தந்த இடங்களில் இப்போது வைக்கப்படுகின்றன. 2025 துவக்கத்தில் கேமராக்கள் பொருத்தப்படும். நகரெங்கும் 10 நகரும் கேமாராக்கள் நேரலைக்கு வரும். வேகம் முக்கியக் கவலையாய் இருக்கக்கூடிய இடங்களை அடையாளம் காண்பதற்காக ஒட்டுமொத்த போக்குவரத்து அளவு அடிப்படையில் இடங்களுக்கு முன்னுரிமை அளித்து, விபத்து வரலாறு மற்றும் பக்கவாட்டு நடைபாதைகள் இருப்பது, மிதிவண்டி வசதிகள், பள்ளிகள், பூங்காக்கள், சமூக மையங்கள், நூலகங்கள் போன்ற அமைவிடங்கள் தரவுரீதியான அணுகுமுறையைப் பயன்படுத்தி தேர்வுசெய்யப்பட்டன.

ஆதாரமும் ஆராய்ச்சியும் உள்ளூர் சாலைகளில் வேகத்தைக் குறைக்கவும் அனைத்துப் பயனர்களுக்கும் பாதுகாப்பான சாலை வலைத்தொடர்பில் பங்களிப்பதிலும் பிற அதிகார எல்லைகளில் ASE திறம்படப் பயன்படுத்தப்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டுகின்றன. குடியிருப்பாளர்கள் ஏற்கெனவே வாகனில் வேகம் காட்டும் கேமராக்கள் இருப்பதைப் பார்த்திருக்கலாம். ஏனென்றால் யார்க் பிரதேசத்தின் ASE திட்டம் தற்போது சில பிராந்தியச் சாலைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

பிற சாலைப் பாதுகாப்பு முறைகள், யுக்திகளுடன் இணைந்து செயல்படுவதற்காக ASE வடிவமைக்கப்படுகிறது. இதில் சாலை வடிவமைப்புகள், கல்வி முன்முயற்சிகள், பாரம்பரிய காவல்துறை அமலாக்கம் ஆகியவை அடங்கும். ASE திட்டமானது MoveSmart நகர்வு மேலாண்மை யுக்தி வாயிலாக வாகனில் வேகத்தைக் குறைப்பதற்கு நகரம் செயல்படக்கூடிய பல வழிகளில் ஒன்று, இது பத்திரமான, மேலும் திறன்மிக்க நீடித்த போக்குவரத்து அமைப்பை வழங்குவதற்கான வடிவம் மற்றும் நகரத்தின் தொலைநோக்குப் பார்வையைக்கு வழிகாட்டியாகவும் உதவுகிறது.

**மேற்கோள்**
"நமது சமூகத்தைப் பத்திரமாக வைத்திருந்து அனைத்துச் சாலைப் பயனர்களையும் பாதுகாப்பது மேயராக எனது தலையாய முன்னுரிமை. இதனால்தான் வாகன் நகரத்தில் தானியங்கி வேக நடைமுறைப்படுத்தல் திட்டத்தை இன்று காலை துவக்கிவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். வேகம் கவலையளிப்பதாக இருக்கக்கூடிய அண்மையிடங்களில் ஓட்டுநர்கள் வேகத்தைக் குறைப்பதற்கு நாங்கள் எடுக்கும் பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. வேகமெடுத்தல் என்பது பொறுப்பற்ற செயல் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் இதனால் - வேகக் குறைப்பு, சாலை விதிகளைப் பின்பற்றுதல், பள்ளிக்குப் போகவும் வரவுமாக இருக்கும் மாணவர்கள் உட்பட மிகவும் பாதிக்கப்படக்கூடிய சாலைப் பயனர்கள் மீது கவனம் ஆகியவற்றைத் தொடர்வதும் உள்ளது. நம் சாலைகள் அனைவருக்கும் பாதுகாப்பானதாக இருப்பதை உறுதிசெய்ய அனைவரும் தத்தம் பங்கினைச் செய்வோம்."
- மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா

**சுருக்கமான தகவல்கள்**
- மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா, கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் நகர அலுவலர் அக். 30 அன்று மிஸ்டி மீடோவ் டிரைவின் தெற்குப் பகுதியிலுள்ள ஆன்ஸ்லே குரோவ் சாலையில் வாகன் நகரத்தின் ASE திட்டத்தைத் துவங்கி வைத்தனர் - 2025 துவக்கத்தில் அடையாளம் கானப்பட்ட பகுதிகளில் ASE கேமரா நிறுவப்பட்டு செயல்பாட்டுக்கு வரும்.
- ASE என்பது அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் வேகக் கட்டுப்பாட்டை அமல்படுத்த ஒரு கேமராவையும் வேக அளவீட்டுக் கருவியையும் பயன்படுத்துகிற ஓர் அமைப்பு.

- நகர ASE திட்டத்தின் ஒரு பகுதியாக வாகன் எங்கிலும் மொத்தம் 10 நகரும் கேமராக்கள் நேரலைக்கு வரும். 'நகராட்சி வேகம் காட்டும் கேமரா விரைவில் வருகிறது' என்ற அடையாளப் பலகைகள் 2025 துவக்கத்தில் கேமராக்கள் செயல்பாட்டுக்கு வரக்கூடிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.
- MoveSmart வாயிலாக சாலைப் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கான பல திடங்களை இந்த நகரம் கொண்டுள்ளது, அவற்றில் அடங்குவன:
  - செயலூக்கத்துடன் பள்ளிக்குச் செல்லுதல்
  - சமூகப் பாதுகாப்பு மண்டலங்கள் கொள்கை (PDF)
  - நடைபாதை ஆய்வுகள்
  - சுற்றுவட்டாரப் போக்குவரத்தை அமைதிப்படுத்தும் திட்டம்
  - வேக வரம்புக் கொள்கை
  - #SlowDownVaughan
- வாகனில் யார்க் பிராந்தியத்தில் உள்ள பிராந்தியச் சாலைகளில் ASE திட்டம் செயலில் உள்ளது.

**மேலும் அறிய**

- வாகன் நகரத்தின் தானியங்கி வேக நடைமுறைப்படுத்தல் இணையப் பக்கம்
- வாகன் நகரத்தின் பாதுகாப்பு மண்டலங்கள் இணையப் பக்கம்
- யார்க் பிராந்திய தானியங்கி வேக நடைமுறைப்படுத்தல் இணையப்பக்கம்

-30-

**வாகன் குறித்து:** வாகன் நகரம் 344,412க்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடன் கனடாவின் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்று. 1991இல் தொடங்கப்பட்ட வாகனில் கான்கார்டு, கிளெய்ன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில், வுட்பிரிட்ஜ் போன்ற சமூகங்கள் அடங்கும். கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நகராட்சியானது யார்க் பிராந்தியம் மற்றும் டொரண்டோ பெரும்பாகப் பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடகத் தொடர்பு**: எமிலி காரிப்பி, ஒருங்கிணைப்பாளர், ஊடகம் மற்றும் வெளியுறவுத் தொடர்புகள்
Communications, Marketing and Engagement Department
T. 647-544-0148 E. emily.gariepy@vaughan.ca